பதிவு எண். ம. 6311 ★ தொலைபேசி: 51331 ★ சிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: ஐப்பசி 22உ (8—11—67) புதன் — வெளியூர்: ஐப்பசி 23உ (9—11—67) வியாழன் [இதழ்: 121

அரசியலில் மீண்டும் மேய வருகிறது 'பசு'!

பசு வதையைத் தடை செய்யக் கோரும் போராட்டத்தினை அண்மையில் மீண்டும் துவங்கப்போவதாக பூரி சங்கராச்சாரியார் புதுடில்லியில் கூறியுள்ளார்.

முரசொலி மாறன் வெற்றி!

தி.மு.கழக ஆட்சிக்கு நாடு வழங்கிய நல்ல தீர்ப்பு

தென் சென்னைத் தேர்தல் முடிவு

கழகத்திற்கு 1,03,000 வாக்குகள் அதிகம் கிடைத்தன-- பொய்யும் புனைந்துரையும் புதைகுழியில் அமிழ்ந்தன!

சென்னை, நவ. 8---

நாடாளுமன்ற தென் சென்னைத் தொகுதி இடைத் தேர்தலில், நாட்டு மக்கள் எதிர்பார்த்தவண்ணம், முரசொலி மாறன் அவர்கள் மகத்தான வெற்றி பெற்றார்.

காங்கிரசுக் கட்சி வேட்பாளர் திரு. சி. ஆர். இராமசாமி பரிதாபமாகத் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்.

கழக வேட்பாளர் முரசொலி மாறன், காங்கிரசு வேட்பாளரைவிட 1,03,000 வாக்குகள் அதிகம் பெற்று வாகை சூடினர்.

நமக்குக் கிடைத்துள்ள தகவலின்படி, மொத்தம் உள்ள 50 வட்டங்களிலும் ஒரு வட்டத்தில்கூட தி. மு. கழக வேட்பாளரைவிடக் காங்கிரசு வேட்பாளர் அதிக வாக்குகளைப் பெறவில்லை. மாறனே எல்லா வட்டங்களிலும் அதிக வாக்குகள் பெற்றிருக்கிறார்.

இத்தொகுதியில் போட்டியிட்ட ஐந்து சுயேச்சை வேட்பாளர்களும் பொறுப்புத் தொகை இழந்தனர்.

இந்த இடைத் தேர்தல் மூலம், கழக ஆட்சிமீது நாட்டு மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது.

காங்கிரசாரின் பொய்யும் புனைந்துரைகளும் புதைகுழியில் அமிழ்த்தப்பட்டன!

"சென்ற பொதுத்தேர்தலில், மக்களெல்லாம் 'போதை'யில் வாக்களித்து தி. மு. கழகத்தை வெற்றி பெறச் செய்துவிட்டார்கள்; இப்போது தெளிந்துவிட்டார்கள்; இனிக் கழகத்துக்கு வாக்களிக்கமாட்டார்கள்" என்று கூறிய பக்தவத்சலத்தின் கூற்று, அர்த்தமற்ற புலம்பல் என்பது தெளிவாயிற்று!

இனிக் காங்கிரசுக்குத் தமிழ்நாட்டில் எதிர்காலம் இல்லை என்பதைத் தென் சென்னை வாக்காளர் பெருமக்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டனர்!

'இந்தி ஆதிக்கத்துக்கு இடங்கொடோம்' என்று இத்தேர்தல் முடிவு மூலம் தமிழ்நாட்டு மக்கள் டில்லிக்கு அறிவித்துவிட்டனர்!

தமிழ்நாட்டு மக்கள் மட்டுமன்றி, இந்தியத் துணைக்கண்டமே ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த தென் சென்னைத் தொகுதி இடைத்தேர்தல் நேற்று அமைதியுடனும், வெற்றிகரமாகவும் முடிவுற்றது.

வாக்கு எண்ணிக்கை இன்று காலை 8 மணிக்குத் தொடங்கியது.

மூன்று சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஓர் இடம் வீதம் ஆறு தொகுதிகளுக்கும் இரண்டு இடங்களில் வாக்குகள் எண்ணப்பட்டன.

இடைத் தேர்தல்கள்--- நகராட்சித் தேர்தல் நிதி

(மாவட்டவாரியாக)

இதுவரை தலைமைக் கழகத்தில் சேர்ப்பிக்கப்பட்டுள்ள தொகை மாவட்டவாரியான விவரம் வருமாறு,—

கோவை	...	20,662
தென் ஆற்காடு	...	14,903
தஞ்சை	...	13,120
மதுரை	...	11,000
வட ஆற்காடு	...	10,102
திருச்சி	...	10,000
நெல்லை	...	7,171
கன்னியாகுமரி	...	4,500
தருமபுரி	...	4,404
சென்னை	...	3,068
செங்கற்பட்டு	...	2,805
சேலம்	...	2,750
இராமநாதபுரம்	...	1,000
		1,05,485
மாணவர் மாநாடு	...	4,444
தனிப்பட்டோர் மூலம்	...	521
ஆக மொத்தம்	...	1,10,450

பொருளாளர், தி. மு. க.

இரஷ்யப் புரட்சி விழாவில் விருந்தினர் புரட்சி!

அக்டோபர் புரட்சியின் 50-வது ஆண்டு விழாவினை நேற்றுக் கொண்டாடிய சோவியத் யூனியன், அந்த வைபவத்துக்கு இரண்டு விருந்தினர்களைத் தான் பெற்றிருந்தது!

'கம்யூனிஸ்டு அல்லாத நாடுகளின் தலைவர்கள்' என்ற முறையில் அங்கே சென்றிருந்த அவ்விருந்தினர்—இந்தியத் தலைமையமைச்சர் இந்திராவும், பின்லாந்து நாட்டின் தலைவர் கெக்கனேன் ஆகிய இருவர் மட்டுமேதான்!

காங்கிரசுக்கு 00!

சென்னை 85-வது வட்டம் டொம்மிக்குப்பத்தில் உள்ள ஒரு வாக்குச்சாவடியில் காங்கிரசுக்கு ஒரு வாக்குக்கூட கிடைக்கவில்லை.

காரில் இருந்தபடியே வாக்களிப்பு!

நேற்று, தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் நடைபெற்ற நிகழ்ச்சி இது :—

மருத்துவமனையிலிருந்து அப்போதுதான் வெளியேறிய வயோதிகர் ஒருவர், கிண்டியிலுள்ள ஐ.ஐ.டி. தேர்தல் சாவடிக்கு அருகில் சென்று, காரில் இருந்தபடியே வாக்களித்திருக்கிறார்!

வாக்களிப்பு முடியும் தருவாயில் தேர்தல் சாவடி நோக்கி அழைத்துவரப்பட்ட அந்த முதியவரின் மகனின் வேண்டுகோளுக்கு இணங்க, தலைமைத் தேர்தல் அதிகாரி சென் வர்மா, வாக்குப் பெட்டியைக் காருக்கு அருகில் எடுத்துச் சென்று அதில் வாக்குச் சீட்டைப் போடுவதற்கு அனுமதி அளித்தார்!

வட்டார ஏற்றத்தாழ்வு நிரந்தரமாக அகற்றப்பட வேண்டும்

தொல்லைகள் தரும் போக்குக்கு முற்றுப்புள்ளி வைப்பது அவசியம்

ஒரிசா முதலமைச்சர் வற்புறுத்தல்

"வட்டார ஏற்றத்தாழ்வு நிரந்தரமாக நீக்கப்பட வேண்டியது அவசியமாகும்; பல்வேறு மாநிலங்களின் தேவைகளை ஆராய இப்போதோ பின்னரோ, ஓர் அமைப்பை மத்திய அரசு அமைக்க வேண்டியது அவசியமாகும்:

"ஒவ்வொரு மாநிலத்தின் நிதித் தேவைகளை ஆராய்ந்து நிதிக் குழு சிபாரிசு செய்கிறது; நிதிக் குழு, பின்தங்கிய மாநிலங்களிடம் எப்போதுமே நியாயமாக நடந்துகொண்டுள்ளது; ஆனால், மத்திய அரசாங்க அதிகாரிகள், இந்தச் சிபாரிசுகளை நிறைவேற்ற முற்படும்போது, ஒரு சார்பான முறையில் நடந்து கொள்வதால் தொல்லைகள் ஏற்படுகின்றன; இவ்வித நிலைமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்"

என்று ஒரிசா முதலமைச்சர் ஆர்.என். சிங்தேவ் சுட்டிக்காட்டி வலியுறுத்தினர்.

நெறிமுறை தவறினர்!

"ஒரிசா அரசாங்க நிர்வாகத்தில் இலஞ்ச ஊழலை ஒழிப்பதே எங்கள் முதல் வேலை"

என்று குறிப்பிட்ட அவரிடம், 'நிலையான நிர்வாகம் நடைபெற இத்துறையில் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறீர்கள்' - என வினவியபோது, அவர் விளக்கியதாவது:—

"நடந்த நிகழ்ச்சிகள் குறித்துப் பாரபட்சமின்றி தனித்து இருந்து நிர்வாகத்தினர் முடிவெடுக்க வேண்டும்; தவறு செய்த அதிகாரிகளை எடுத்த எடுப்பிலேயே துண்டித்துவிடவும் முடியாது; கடந்தகால ஆட்சியின்போது கடும் அரசியல் நிர்ப்பந்தம் இருந்தது என்பதுடன், அமைச்சர்களும் அளவுக்கு மீறி தலையிட்டு வந்ததால், அதிகாரிகள் நெறி முறை தவற நேர்ந்தது; குறிப்பாக 6 ஆண்டுகளாக இலஞ்சமும், ஊழலும் தலைவிரித்தாடியது!

"எனவே நாங்கள், பதவி ஏற்றதும் முதல் வேலையாக நிர்வாகத்தைத் தூய்மையுறச் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டதுதான்; இது தொடர்பாக ஏற்கனவே வேலை ஆரம்பமாகிவிட்டது.

"இலஞ்ச, ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர்களும், அதிகாரிகளும் எளிதில் விட்டுவிடப்பட மாட்டார்கள்.

"காங்கிரசு ஆட்சியின்போது 2,000 இலஞ்ச ஊழல் வழக்குகள் வெளியே தெரிந்தன: ஆனால், அரசியல் நிர்ப்பந்தம்—மற்றும் பிற காரணங்களினால், இவை பற்றிய விசாரணைகள் நிறுத்தப்பட்டன; இவற்றில் பலவற்றில் மீண்டும் புலன் விசாரணையை நாங்கள் தொடங்கி இருக்கிறோம்."

"நீங்கள் அமைத்த விசாரணைக் குழு என்னவாயிற்று? விசாரணை தொடர்பாக இத்தனைக் காலம் பிடித்தது ஏன்?" என்ற கேட்டபோது, அவர் குறிப்பிட்டதாவது:-

"விசாரணைக் குழு அமைக்கப்பட்ட போதிலும், முன்னாள் முதலமைச்சர்கள் மூவர் (பிஜோ பட்நாயக், பிரேன் மித்திரா, எஸ். திரிபாதி) மீதுள்ள புகார்களை விசாரிக்க வேண்டியிருப்பதால், திறமையான நீதிபதி ஒருவரை நியமிக்க விரும்பினேம். நவம்பர் 8-ந்தேதி விசாரணை துவங்கும்; ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் உள்ளதுபோல், 'ஆம்புட்ஸ்மன்' போன்ற பொதுப் புகார்களை விசாரிக்கும் குழுவை இங்கும் நியமிக்க சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்."

அசைக்க முடியாது!

"ஒரிசா அமைச்சரவையைக் கவிழ்க்கக் காங்கிரசுக் கட்சி முயற்சி செய்கிறதா?" என வினவியபோது அவர் கூறியதாவது:—

"ஆமாம்; ஒரிசா அரசாங்கத்தை இழிவுபடுத்த முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன; எங்கள் அமைச்சரவையைக் கவிழ்ப்பது எளிதான காரியம் அல்ல; இன்னும் 5 ஆண்டுகளுக்கு எங்களை அசைக்க முடியாது."

பணம் பாழான விதம்!

"பாரதீப் துறைமுகத்தில் அரசாங்கம் ஏராளமான பணத்தைக் கொட்டியிருக்கிறது; இதனல் ஏற்பட்ட ரூ. 8 கோடி கடனுக்குக் காங்கிரசு அரசாங்கம்தான் பொறுப்பு என நம்பப்படுகிறது; இப்போது இத்திட்டத்தை மத்திய அரசாங்கமே ஏற்றுக்கொண்டதால் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க இசைவு தருகிறதா?" என்று கேட்கப்பட்டபோது அவர் விளக்கியதாவது:—

"எங்களுடைய நிதித் தொல்லைகளுக்கெல்லாம், பாரதீப் துறைமுகத் திட்டமே காரணம்; இப்போது மத்திய அரசாங்கம் இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டபோதிலும், 'ஓவர் டிராப்ட்' தொகையைச் சரிக்கட்ட மறுக்கிறது; ரூ. 8 கோடியைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருப்பதுடன், அதற்கு வட்டியும் சேர்த்து செலுத்த நேரிட்டிருக்கிறது. இந்த 'ஓவர் டிராப்டை'த் தள்ளுபடி செய்யும்படி மத்திய அரசை நாங்கள் கேட்டிருக்கிறோம்."

"மாநில அரசுத் துறையில் இத்திட்டம் செயலாகும்போது ஏராளமான பணம் வீணாகச் செலவிடப்பட்டது எனச் சொல்லப்படுகிறதே?" எனக் கேட்டதற்கு அவர் கூறியதாவது:—

"பிஜோ பட்நாயக் முதலமைச்சராக இருந்தபோது, பாரதீப் துறைமுகத்தை நடுத்தர துறைமுகமாக மாநில அரசுத் துறையில் அபிவிருத்தி செய்ய டில்லியின் இசைவு பெற்றார். இதைப் பெரிய துறைமுகமாக அபிவிருத்தி செய்யலாம்; ஏனெனில், இங்கு கடல் ஆழமானது; ஆனால், ஏற்றுமதிக்குரிய இரும்புக் கனிகளைக் கொண்டு செல்ல இரயில் பாதை வசதி இல்லாததால், ரூ. 16 கோடி செலவில் சாலை அமைக்கப்பட்டது; ஆனால் மோசமாகக் கட்டப்பட்டதால்—கீறல்களும், குண்டும் குழியுமாக இருந்ததால்—மீண்டும் ரூ. 4 கோடி செலவில் சீராக்கப்பட்டது."

பலன்தராத திட்டங்கள்

ஒரிசா முதலமைச்சர் வெளியிட்ட மேலும் சில கருத்துக்கள் வருமாறு:—

"ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு முதலீடு மாநிலங்களுக்கு 60 சதவீதமாகவும் மத்திய அரசுக்கு 40 சதவீதமாகவும் இருக்கிறது; இது கூடாது; மத்திய அரசு—மாநில அரசு இரண்டுமே தலைக்கு 50 சதவீதம் செலவழிக்க வேண்டும்.

"விரும்பிய பலன் தராத சிறு திட்டங்களில் ஏராளமான பணம் முதலீடு செய்யப்பட்டிருப்பதை நாங்கள் இப்போது கண்டுபிடித்திருக்கிறோம்; இவற்றை இப்போது சீர்திருத்த ஏற்பாடுகள் செய்துவருகிறோம். எங்களுக்குப் போதுமான நிதி வளம் கிட்டியதும், மேலும் பல வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுவோம்."

வீண் செலவு!

ஜபல்பூரில் கூடிய இளைஞர் காங்கிரசு, மறைந்த லால் பகதூர் நினைவாக சனவரி முதல் தேதியன்று டில்லியிலிருந்து தாஷ்கண்டு வரை 'சாஸ்திரி ஜோதி' ஒன்றை ஏந்திச்செல்லப் போகிறதாம்!

ஜவகர்லால் நேரு நினைவாக—அவர் மறைந்தவுடன்—இதேபோன்ற 'ஜவகர் ஜோதி' ஒன்று ஏற்றிவைக்கப்பட்டது; இதனை அணையாமல் பாதுகாப்பதற்காக நாளொன்றுக்கு ரூ. 160 செலவழிக்கப்பட்டு வருகிறதாம்! இதைப் பார்த்துக் கொள்வதற்காக மூன்று ஊழியர்கள் அமர்த்தப்பட்டுள்ளார்களாம்!

நெல் கொள்முதல்—உ. பி. அரசு முடிவு

இலட்சுமணபுரி, நவ. 8—
1968 பிப்ரவரித் திங்கள் முதல் அரசினரே நேரடியாக நெல் கொள்முதல் செய்வதென உ.பி. அமைச்சரவை முடிவு செய்துவிட்டது.

அரிசி ஆலைக்காரர்கள் தரவேண்டிய அரிசி

தமிழக அரசின் புதிய ஆணை

தஞ்சை, நவ. 6—
ஏ.டி.டி. 27 வகை நெல்லில் அரிசி ஆலைக்காரர்கள் தரவேண்டிய அரிசியைக் குவிண்டாலுக்கு 64.5 சதவிகிதமாகக் குறைத்து அரசு ஆணையிட்டுள்ளது. அரைவைக் கூலி ஆலைக்காரர்களுக்குத் தரப்படும்.

அரசு முதலில் '65.5 சதவிகித அரிசி தரவேண்டும்' என்று கேட்டு பிறகு அதைச் சென்ற வாரம் 65 சதவிகிதமாகக் குறைத்தது; அரிசி ஆலைக்காரர்கள் '63.5 சதவிகிதந்தான் கட்டுப்படியாகும்' என்றார்கள்; அதன்பேரில், இப்பொழுது 64.5 சதவிகிதமாக அரசு மேலும் குறைத்திருக்கிறது.

1,10,264 டன் அரிசி கொள்முதல்

கடந்த ஞாயிற்றுக் கிழமை வரையில் தஞ்சை மாவட்டத்தில் 1,10,264 டன் அரிசி கொள்முதலாகியிருக்கிறது என்றும், இதில் 74,831 டன் அரிசி பற்றுக்குறைப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் தஞ்சை மாவட்ட ஆளுநர் ரங்கபாஷ்யம் கூறினர்.

நிதி நிலைமை திருந்தும் வரையில்...!

சென்னை, நவ. 6—
"தமிழக அரசின் நிதி நிலைமை திருந்தும் வரையில், உணவுப் பண்டங்கள்—உணவுத் தானியங்கள் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் விற்பனை வரியை நீக்கிவிடுவதற்கான வழிவகைகள் இல்லை.

"'சமூக நீதி' என்ற வகையில், 'உணவுத் தானியங்கள், உணவுப் பண்டங்கள் ஆகியவற்றின்மீது விற்பனை வரி விதிக்கக் கூடாது' என்று அரசு கருதியபோதிலும், வருவாய் குறைந்து வருவதாலும், செலவுகளை மேலும் குறைத்துக்கொள்ள முடியாதாகையாலும் இந்த விற்பனை வரியை நீடிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

"நில வரியை நீக்காவிட்டாலும்கூட, அதை வசூலிப்பதற்கே அதிலிருந்து கிடைக்கும் வருவாயில் ஒரு கணிசமான பகுதியைச் செலவிட வேண்டியிருக்கிறது.

"பணக்காரர்கள் வரிகளை ஏய்ப்பதால், மாநில அரசின் வருவாய் மேலும் குறைந்துவிடுகிறது. மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் கடனுதவிகளுக்குச் செலுத்தும் வட்டியையும், மற்றும் கல்வி—பொதுச் சுகாதாரம்—அரசு ஊழியர்கள் ஊதியம் ஆகியவற்றிற்கான செலவுகளையும் குறைப்பதற்கில்லை.

"படித்தவர்களும், அறிவாற்றலுள்ளவர்களும் கூட்டுறவு இயக்கத்தில் தீவிர பங்குபற்றி வருவதால் கூட்டுறவுச் சங்கங்களில் ஊழல் குறைந்துவருகிறது!"

--முதலமைச்சர் அண்ணா

உணவு உற்பத்தியைப் பெருக்கத் தமிழக அரசு முயற்சி

ஐந்து இலட்சம் ஏக்கர் நிலத்தில் புதிய ரக நெல் பயிரிடப்படும்

சீர்திருந்திய நெல் விதைகளைப் பயன்படுத்துமாறு உழவர்கள் தூண்டப்படுகின்றனர்

சென்னை, நவ. 7—
உணவு உற்பத்தியைப் பெருக்கத் தமிழக அரசு, புதிய சோதனை ஒன்றை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறது; தற்போதைய குறுவை சாகுபடியின்போது, வழக்கமான நெல் ரகத்தைப் பயன்படுத்தாமல், சீர்திருந்திய நெல் விதைகளைப் பயன்படுத்த விவசாயிகளுக்குத் தூண்டுதல் அளித்திருக்கிறது"

என்று விவசாயத்துறை டைரக்டர் கே. திரவியம், யூ. பி. எஸ். செய்தியாளரிடம் கூறியிருக்கிறார். அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"'ஏ.டி.டி.–27' ரக நெல் விதையைப் பல இடங்களில் விவசாயிகள் விதைத்து நல்ல பலன் தந்திருக்கிறார்கள். புதிய ரக நெல்லுக்கு மாறுமல் தயங்கிவந்த விவசாயிகள், குறுவை சாகுபடியின்போது புதிய ரக நெல்லுக்கு மாறுவார்கள் என்று நம்பப்படுகிறது.

"தஞ்சை மாவட்டத்தில் உள்ள மூன்று இலட்சம் ஏக்கர் நிலத்தில், ஏறத்தாழ 2.8 ஏக்கர் நிலத்தில், 'ஏ.டி.டி.–27' ரக நெல் பயிரிடப்பட்டிருந்தது; மற்றொரு ஒன்பது இலட்சம் ஏக்கர் நிலத்தில் வழக்கமான சம்பா நெல் பயிரிடப்பட்டது; சுமார் 2 இலட்சம் ஏக்கர் நிலத்தில் இரு போக சாகுபடி செய்யப்பட்டது; எல்லாமே நல்ல பலனை அளித்திருக்கின்றன.

"குறுவை சாகுபடியின்போது 5 இலட்சம் ஏக்கர் நிலத்தில் புதிய ரக நெல் பயிரிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக அமோக நெல் விளைச்சல் காணலாம்."

சீன அணு விஞ்ஞானிகள் அமெரிக்காவில் பயிற்சி பெற்றவர்கள்!

சீனாவிலுள்ள உயர்மட்ட அணு விஞ்ஞானிகளில் கிட்டத்தட்ட அனைவரும், அமெரிக்காவில் பயிற்சி பெற்றவர்களாவர்!

கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலுள்ள விஞ்ஞானியர், இது குறித்து வெறுப்புக் கொண்டுள்ளனர்; சீன தமது மூளையை ஏற்காமல், அதன் எதிரி நாட்டிலிருந்து வந்தவர்களை ஏற்றுக்கொண்டது குறித்து அவர்களுக்கு ஏமாற்றமும் இருக்கிறது!

'பாங்கிகளைத் தேசியமயமாக்கு!'

காங்கிரசு எம்.பி.-க்கள் கையெழுத்து இயக்கம்!

புதுடில்லி, நவ. 8—
"பாங்கிகளை முற்றிலும் தேசியமயமாக்க வேண்டும்" என, காங்கிரசுப் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே புதிதாகக் கையெழுத்து இயக்கம் நடந்துவருகிறது.

"ஆளுங் கட்சியிலுள்ள தீவிர சோஷலிசவாதிகள், அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க விரும்புகிறார்கள்; இல்லையென்றால், தனிபட்ட பாங்கிகள்மீது சமூகக் கட்டுப்பாட்டுக்குக் கடுமையான நடவடிக்கைகளை மொரார்ஜி தேசாய் மேற்கொள்ளமாட்டார்" என, இவர்கள் கருதுகிறார்கள்.

இம்மாதம் மூன்று அல்லது நான்காவது வாரத்தில் சமூகக் கட்டுப்பாடு பற்றிய திட்டவட்டமான ஏற்பாடுகள் தெரியவரும்.

மத்தியில் காங்கிரசு நீண்டநாள் வாழுமா?

பதவியோடு வளர்ச்சி பெறும் இந்திராவின் நிலை என்ன?

கட்சிக்குள் எழுப்பப்படும் கோரிக்கையை தலைமையமைச்சரால் முறியடிக்க இயலுமா?

‘அரசியல் பரிசு’களை நாடும் கரங்கிரசுத் தலைவர்களுக்கு ‘அரசியல் தந்திர’ப் பதவிகள் கவர்ச்சி தரவில்லை!

புதுடில்லி, நவ. 8—

கடந்த சில மாதங்களாகத் தீர்மானமின்மையாலும், கட்சிப் பூசலாலும் செல்வாக்குக் குன்றிய தலைமையமைச்சர் இந்திரா, இப்போது செல்வாக்குப் பெறத் தொடங்கியிருக்கிறார் என்று தோன்றுகிறது.

ஜபல்பூர் மாநாட்டின் பயனாகக் காங்கிரசுக் கட்சிக்குள் இந்திரா காந்தியின் நிலை வலுப்பட்டுவிட்டதா என்பதை, பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டத் தொடரில்தான் தெரிந்துகொள்ள இயலும்.

கட்சியிலுள்ள இளந் தீவிரவாதிகளின் பாதையை ஒட்டியும், விட்டுக்கொடுக்காத பழமையாளரை ஒட்டியும் தலைமையமைச்சராலும் செல்ல முடிந்தது; இதற்கு மிகுந்த நுட்பம் வேண்டும். அவர் அவ்வளவு கெட்டிக்காரத்தனமாக நடந்துகொண்டார் என்பதால், அவர் தனது பதவியோடு வளர்ச்சி பெற்று வருகிறார் என்பது தெரிகிறது.

“ஜபல்பூர் மாநாட்டில் இளந் தீவிரவாதிகளின் வாய் அடைக்கப்பட்டபோதிலும், அவர்களிடமிருந்து வரக்கூடிய ஆபத்துத் தவிர்க்கப்பட்டு விடவில்லை” என்று கட்சிக்குள்ளிருக்கும் புள்ளிகள் கூறுகின்றனர்.

அரசியல் அமைப்பில் ஒரு நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டுமாயின், தலைமையமைச்சர் இவ்வாறு கயிற்றில் நடப்பது போன்ற சங்கடமான வேலையைப் பழகித்தானாக வேண்டும்.

ஆளுங்கட்சி, நாட்டின் பெருகிவரும் தொல்லைகளைச் சமாளிக்கத் தவறுமாயின், அது நீண்டநாள் வாழாது என்று உறுதியாகக் கூறலாம்.

“உணவு நிலைமையைப் பொறுத்தவரையில், தலைமையமைச்சர் தப்பித்துவிட்டார்; அமோக விளைச்சலினால் வேளாண்மையாளர், வியாபாரிகள் ஆகியோரின் நடுவே நம்பிக்கை புத்துயிர் பெற்றுவிடும்; ‘அயல் நாட்டினர் வழக்கம்போல் உதவியைக் கொட்டியதும், மந்த நிலை பழங்கதையாகிவிடும்” என்று இங்குள்ளோர் அனைவரும் நம்புகின்றனர்.

இந்திரா காந்தி, பாங்கிகளைத் தேசியமயமாக்கும் நடவடிக்கையையும், இதர தீவிர நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்தி மீண்டும் நம்பிக்கையை உண்டாக்கிவிட்டார்!

ஆனால் தனது இலக்குகள் வெகு தொலைவில் உள்ளன என்ற போதிலும், தன்னை ஒரு சோஷலிச அமைப்பு என்று காட்டிக் கொள்வதற்காக, காங்கிரசு எதையாவது செய்தாக வேண்டும் என்று கட்சிக்குள் எழுந்துள்ள கோரிக்கையை முறியடிப்பது அவருக்கு மிகவும் கடினமாயிருக்கலாம்.

“சோஷலிசத்தைக் கொண்டுவரக்கூடிய நிர்வாகத் திறன் நாட்டில் குறைவு” என்பதைத் தலைமையமைச்சர் உணர்ந்திருக்கிறார்!

பிரிட்டனிலுள்ளதைப் போன்ற சோஷலிசம் இங்கு உருவாக நீண்ட காலமாகும்; தொட்டிலிலிருந்து சுடுகாடு வரையிலும் மக்களுக்குச் சமூகப் பாதுகாப்பளிக்கும் அரசியல் முறை மிகவும் சிக்கலானது; அதை உருவாக்க நீண்ட காலமாகும். இந்நாட்டின் பரந்த மக்கட் தொகையும், ஒன்றுக்கொன்று முரணான சமூக அமைப்பும், கொள்கை—திட்டக்காரர் எவருக்கும் கடினமான வேலையைக் கொடுத்தே தீரும்!

புதுடில்லி இன்றுள்ளவாறு அயலுதவியை நம்பி நிற்கும் வரையிலும், நமது தேவைகளுக்கேற்பப் பெரிதும் மாற்றியமைக்கப்பட வேண்டிய சமூகப் பாதுகாப்பு ஏற்பாட்டை உருவாக்குவதற்காகப் பெருந் தொகையைச் செலவிட முடியாது; இருப்பினும், அமைச்சரவையை விரிவாக்கிப் புது இரத்தம் ஓடுமாறு செய்து, தீவிரவாதிகளை மடக்க இந்திரா முயற்சிக்கக்கூடும்!

“டி. சஞ்சீவய்யா போன்ற அரிசனத் தலைவர்களைக் கொண்டு வந்து, தாழ்ந்த வகுப்பாருக்கு இந்திரா காந்தி மேலும் பிரதிநிதித்துவம் அளிக்கலாம்” என்று கருதப்படுகிறது.

சஞ்சீவய்யா மாஸ்கோவிற்குத் தூதராகச் செல்லுமாறு கேட்கப்பட்டார்; ஆனால் அவர் மறுத்துவிட்டார்; ‘அரசியல் பரிசு’களை நாடும் காங்கிரசுத் தலைவர்களை ‘அரசியல் தந்திர’ப் பதவிகள் கவரவில்லை!

முறியடிக்கத் தயாராம்!

மாஸ்கோ, நவ. 8—

“இரஷ்யாவையும், சோஷலிஸ்டு நாடுகளையும் தாக்கக்கூடிய எந்த ஆக்கிரமிப்பாளரையும் முறியடிக்க இரஷ்யப் படை தயாராக இருக்கிறது”

என்று, சோவியத் தலைமையமைச்சர் கோசிஜின், ‘அக்டோபர் புரட்சி’ விழாவினையொட்டி ஆற்றிய உரையில் குறிப்பிட்டுள்ளார்.

சிறைக் கைதிகளுக்கு யோக சாதனப் பயிற்சி

பாடியாலா, நவ. 8—

மாநிலத்திலுள்ள பள்ளிகளிலும், மாவட்டச் சிறைகளிலும் ‘யோக சாதன முறை’யைப் பிரபலப்படுத்த பஞ்சாப் அரசு திட்டமிட்டிருக்கிறது.

சண்டிகாரில் உள்ள அரசாங்க யோகப் பயிற்சி நிலையம் மேற்படி பயிற்சிக்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

மதுவிலக்குப் பிரச்சினையில் புதுவையில் குழப்ப நிலை!

புதுவை, நவ. 8—

பாண்டிச்சேரி அமைச்சரவையைக் கவிழ்க்க வந்த அரசியல் புயல், இப்போதைக்கு மறைந்துவிட்டது! ஆனால், அப்புயல் எத்தனைக்காலம் அமைதியாக இருக்கும் என்பதை, பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்!

இன்று ஆட்சி செய்யும் அமைச்சரவையின் பதவிக் காலம் இன்னும் ஆறு திங்கள்தான்; ஏனெனில், 1968 மார்ச்சில் பொதுத் தேர்தல் நடந்து புதிய அரசு அமையவேண்டும்.

அரசின் அமைப்பில் பெரிய மாறுதல் எதுவும் ஏற்படப் போவதில்லை எனலாம்; சோஷலிச ஆதரவாளர்களாயிருக்கும் கம்யூனிஸ்டுகள் தாமாகவே ஆட்சியைக் கொண்டு செலுத்திவிட முடியாது; எனவே காங்கிரசும் — முன்னாள் முதலமைச்சரான குபேரின் தலைமையிலுள்ள சனநாயக முன்னணியும் மோதும்.

முனபு முதலமைச்சராயிருந்த வெங்கடசுப்பா ரெட்டி நான்கு மாதங்களுக்குமுன்னர், சட்டமன்ற அவைத் தலைவராக இருந்த மரைக்காயர் பதவிக்கு வருவதற்காக விலகியபோது ஆளும் கட்சியான காங்கிரசுக்குள் குழப்பம் ஏற்பட்டது.

நான்கு மாதங்களுக்கு முன்னர் ‘இரட்சகரா’கக் கருதப்பட்ட மரைக்காயரிடம் இப்போது என்ன குறை வந்துவிட்டது? அவர், மதுவிலக்கை இம் மாநிலத்தில் வேகமாகக் கொண்டுவருவதில் முனைந்து நிற்கிறார்; ஆனால், அவர் இதை இவ்வளவு தீவிரமாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்று அவரது கட்சியினரில் பலர் கருதுகின்றனர்.

பதவியிலிருந்து விலகிய ரெட்டியார் மீண்டும் பதவிக்கு வர அவாவுறுகிறார்; அவர் மதுவிலக்கு எதிர்ப்பாளர்களுடன் முற்றிலும் ஒன்றி நிற்கிறார். அவரை ஒரு காலத்தில் ஏற்காத பல காங்கிரசுக்காரர்கள், இப்போது அவரைப் பதவியில் வைக்க உறுதிபூண்டுள்ளனர்!

இம்மாநிலத்தில் மதுவிலக்கைக் கொண்டுவர வேண்டுமென்பதை, மத்திய அரசுப் பகுதியின் லெப்டினண்ட் கவர்னரும் தலைமை ஆட்சியாளருமான சீலம் கூறினார்; ‘பாண்டிச்சேரி, சிறுகச் சிறுக அயல் மதுவகை இறக்குமதியைக் குறைக்கும்’ என்று சென்ற ஆண்டு சீலம் திட்டமிட்டார். அவர் தலைமை ஆட்சியாளராயிருந்து மத்திய உள்துறை அமைச்சகத்தின்கீழ் பணிபுரிந்து வருவதால், மது இறக்குமதியில் 60 சதவிகிதத்தை வெட்டி, மாநிலத்தில் அதன் விற்பனையைக் கட்டுப்படுத்தினார்.

அப்போது முதல்வராயிருந்த ரெட்டியார், தலைமை ஆட்சியாளரின் முடிவிற்கு உள்துறை அமைச்சகத்திடம் எதிர்ப்புத் தெரிவித்தார்; ஆனால், ‘அதை மாநிலச் சட்டமன்றமே தீர்க்க வேண்டும்’ என்று உள்துறை அமைச்சகம் தள்ளிவிட்டது!

ரெட்டியார் இது குறித்துப் பகிரங்கமாகப் பேச விரும்பவில்லை. எதுவும் நடவாததால், காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்கள், ‘லெப்டினண்ட் கவர்னரை நீக்க வேண்டும்’ என்று குடியரசுத் தலைவரிடம் முறையிட்டனர்!

மரைக்காயர், சீலத்தின் மதுவிலக்குக் கொள்கையை ஆதரித்ததும் தகராறு கிளம்பிவிட்டது! மரைக்காயர் உறுதியான காங்கிரசுக்காரராக இருப்பதால், ‘இம் மாநிலத்தில் மதுவிலக்கு எடுபட வேண்டும்’ என நினைக்கிறார்!

துரதிருஷ்டவசமாகப் பாண்டிச்சேரியில் பலர் மது விற்பவர்களாக இருக்கின்றனர்; எனவே, இம்மாநிலத்தில், தலைவலி போய்த் திருகு வலி வரலாம்!

இந்தியா தனித்து விடப்படுகிறதா?

நிலைமையை உணராதது பற்றி விளக்கம்

ஐ.நா., நவ. 8—

“ஆசியாவில், வட்டார அடிப்படையிலான குழுக்கள் உருவாகிவருவதைத் தொடர்ந்து இந்தியா மேலும் தனித்து விடப்பட்ட நாடாகிவிடலாம்” என்று இங்குள்ள இந்தியாவின் நண்பர்களிடையே கவலை நிலவுகிறது.

“இந்த நிலைமை, யாரும் வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யாததாகும்” என்று, ஐ.நா.-வில் பெரும்பாலான பார்வையாளர்கள் கருதுகின்றனர்; அதைவிட மோசம் என்னவென்றால், ‘அந்த நிலைமை உருவாகிவருவதை இந்தியா உணரவில்லையே என்பதாகும்’ என்று சிலர் கருதுகின்றனர்.

இந்தியாவின் மேற்குப்புறத்திலுள்ள அண்டை நாடான பாகிஸ்தான், அவ்வட்டாரத்தில் துருக்கி, ஈரான் ஆகியவற்றுடன் மிக நெருக்கமான வட்டாரக் குழுவை அமைத்துக்கொண்டிருக்கிறது.

இந்தியாவுக்குக் கிழக்கே ஐந்து நாடுகள் சேர்ந்த தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கான அமைப்பு (‘அசியன்’) உருவாகியுள்ளது; அதில் சேர மேலும் பல நாடுகள் விரும்புகின்றன—இலங்கையைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

‘அசியன்’ அமைப்பில் இந்தோனேஷியா—தாய்லாந்து—சிங்கப்பூர்—பிலிப்பைன்ஸ்—மலேசியா ஆகியவை அடங்கியுள்ளன.

பர்மா, கம்போடியா ஆகியவற்றையும் அந்த அமைப்பில் இழுத்துப்போட தென் கிழக்காசிய நாடுகள் நம்பிக்கை கொண்டுள்ளன. சுருங்கச் சொன்னால் மேற்கே உள்ளதைப் போலவே கிழக்கிலும் இந்தியா தனித்து விடப்படும்.

“இந்தியாவின் வட எல்லையைப் பொறுத்தவரையில், இராசதந்திர முயற்சிக்கு இந்தியாவுக்கு வாய்ப்பு ஏதுமில்லை” என்று ஐ.நா. ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சீனா – இந்தியா இடையே பகை உள்ளது; அண்மையில்தான் சிக்கிமில், இந்தியா – சீனா இடையே கைகலப்பு ஏற்பட்டது.

இவையெல்லாம், இந்தியாவை இராசதந்திரரீதியில் ஆசியாவில் எந்த நிலைக்கு உள்ளாக்குகின்றன என்று இந்தியாவின் நண்பர்கள் கேட்கின்றனர்.

வேண்டுமென்று திட்டமிட்டதாலோ, தற்செயலாகவோ—அறிந்தோ, அறியாமலோ—இந்தியாவானது மேற்கு, கிழக்கு, வடக்கு ஆகிய திசைகளிலும்—இலங்கையை எடுத்துக்கொண்டால் தெற்கிலும்—தனித்து விடப்படுவதாகத் தோன்றுகிறது.

எனினும், இதில் ஒரு பிரகாச அம்சம் உள்ளது; அதாவது, குறைந்தபட்சம் மேற்கத்திய நாடுகளில் ‘இந்தியாவானது’ சீனாவைப் போலவே தனி ஒரு வட்டாரம்’ என்று குறிப்பிடப்படுகிறது.

வீர மராட்டியத்தில் வீணர்களின் கொட்டம்!

பம்பாய் கழகக் கூட்டத்தில் கண்டனம்

பம்பாய்–கொலாபா தி. மு. க. சார்பில் மீரமார் திறந்தவெளி அரங்கில், 12—10—67 மாலை 6-மணிக்கு தோழர் கே. ஏ. டேவிட் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அனைவரையும் செயலாளர் வள்ளுவன் வரவேற்றுப் பேசினார். நெல்லை திராவிடமணி பேசியதாவது:—

“மராட்டிய சமுதாயத்தைப் பற்றி நாங்கள் என்றைக்குமே தனி மதிப்பு வைத்திருக்கிறோம். ‘மலைகுலைந்தாலும் மனங்குலையாத மாவீரன்—மராட்டிய மண்டலத்தின் மதிப்புமிக்க மன்னன் சத்திரபதி சிவாஜி மாமன்னன்’ என்று இருபது ஆண்டுகளுக்கு முன்னாலேயே அறிஞர் அண்ணா அவர்கள் சிறப்புத் தந்தார்கள்.

மராட்டிய மண்ணிலே தோன்றிய திலகரின் பெயர் பரம்பரை பரம்பரையாக நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காகவே, தென்னகத்தில் சுதேசிக் கப்பல் ஒட்டிய வீரத் தலைவன் வ. உ. சி.-யை, ‘தென்னாட்டின் திலகர் வ. உ. சி.’ என்று பெருமையுடன் அழைக்கின்றோம்.

சரித்திரத்தில் முக்கியத்துவம் பெற்ற கோகலே போன்ற மேதைகள் இந்த மண்ணிலே பிறந்தவர்கள்தான் என்று பெருமையுடன் பாராட்டுகின்றோம்.

மராட்டிய பூமி தந்த தேஷ்முக், பொருளாதார நிபுணராக இருந்து சிறந்த நிதியமைச்சராகப் பணி புரிந்திருக்கிறார் என்பதைப் பாராட்டுகிறோம்; அவரை மதிக்கின்றோம்.

இப்படிப்பட்ட தியாகிகள்—அறிஞர்கள் தோன்றிய மராட்டிய சமுதாயத்தில், இன்றையத் தினம் ஒருமைப்பாடு சிதைவுக்கு வித்திடும் வண்ணம் தோன்றிச் செயல்பட்டு வருகின்ற ‘சிவசேனை’ இயக்கத்தை நாங்கள் வெறுக்கின்றோம் —எங்கள் கண்டனத்தையும் தெரிவிக்கிறோம்.”

மற்றும் தோழர்கள் கே. கே. இராமநாதன், வள்ளிநாயகம், எஸ். தியாகராசன், எஸ். சுப்பிரமணியம், த. மு. பொற்கோ, நெல்லைச் செழியன், வத்தலக்குண்டு தமிழ்மாறன் ஆகியோர் பேசினர்.

தோழர் வி. முனியாண்டி நன்றி கூறினார்.

கள்ளக் கடத்தலை ஒடுக்க நடவடிக்கை!

தலைமை அமைச்சர் முயற்சி

கடத்தல்காரர்களை ஒடுக்கும் நடவடிக்கை பற்றிய ஏற்பாடுகளைத் தலைமையமைச்சர் டட்லி சேனநாயகா அங்கீகரித்துவிட்டார்; அவரே அந்நடவடிக்கைகளை முன்னின்று நடத்துவார்.

கள்ளக் கடத்தல் ஒழிப்பு—தகவல் சேகரிப்பு—வளைத்துப் பிடித்தல் ஆகிய பணிகளைச் செய்யும் ஒரு மத்திய பிரிவு அமைக்கப்படும். அதில் சுமார் 200 அதிகாரிகளும், ஊழியரும் அடங்கியிருப்பர்.

அப்படையினர், கொழும்பிலுள்ள தலைமையகத்துடன் விடாது தொடர்பு கொள்ளும் வகையில் வானொலி அமைப்பும் இருக்கும்.

கள்ளக்கடத்தல்காரர்கள் சுற்றி வளைக்கப்படவிருக்கும் செய்தி, முன்னைப்போல் வெளியேறிவிடாமலிருக்கக் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும்.

இலங்கைத் தீவிலிருந்து ஆண்டுதோறும் ரூ. 35 கோடி மதிப்புள்ள மணிக்கற்களும், ரூ. 20 கோடி மதிப்புள்ள இறக்குமதிப் பண்டங்களும் கடத்தப்படுவதாக இரசியத் தகவல்களிலிருந்து தெரிகிறது.

டாக்டருக்கு மருந்து

"நேற்று நடந்த தென் சென்னை வாக்குப் பதிவில், பெண்கள் வாக்குப் பதிவு குறைவாக இருந்தது; பெண்கள் மத்தியில் ஏற்பட்ட பீதியும் பயமுமே இதற்குக் காரணம்" என டாக்டர் விஜயலட்சுமி கூறியுள்ளதாக, ஒரே ஒரு தமிழ்ப் பத்திரிகையில் மட்டும் இன்று காலை செய்தி வெளிவந்துள்ளது!

டாக்டர், 'ஒரு அம்மையார் தான்' என்பதை நல்லவேளை —பெயரே சொல்லிவிடுகிறது! இல்லையென்றால், பெண்களைப் பற்றி இப்படி ஒரு பொய்யான கணிப்பை வெளியிட்டிருப்பது ஆணகத்தான் இருக்க முடியும்" என, பலர் நினைக்கக் கூடும்!

டாக்டர் விஜயலட்சுமி, இப்போதுதான் காங்கிரசுக்கு வந்தவர்! முன்பு—வேறொரு கட்சியில் இருந்தவர்!

தேர்தலுக்குமுன் சில நாட்கள் வரையில்கூட, காங்கிரசிலிருந்து அவர், 'வந்ததைப் போலவே வெளியேறிவிடுவார்' என்று நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து செய்திகள் வந்தபடி இருந்தன!

அவைகளுக்கெல்லாம் 'வரவேற்பு' இல்லை என்ற காரணத்தாலோ என்னவோ— அம்மையார், இதுவரையில் அங்கேயேதான் இருக்கிறார்! சரியாகக் கூறுவதென்றால், 'இல்லாததுபோல்' இருக்கிறார்!

அவர் அறிக்கை, 'எந்த அளவுக்கு உண்மையானது' அல்லது அவர், 'எந்த அளவுக்குப் பெண்கள் சமுதாயத்தினைப் பிரதிபலிக்கிறார்' என்பதைக் காட்டப் பின்வரும் செய்தித் தொகுப்புக்களை அவர் பார்வைக்கு வைப்போம்:—

'தென் சென்னை தேர்தலின் அமைதிக்கு தலைமைத் தேர்தல் அதிகாரி பாராட்டு'

இது, நேற்று மாலை செய்தியாளர்கள், சென் வர்மாவைச் சந்தித்த பின்னர் வெளியிட்ட செய்தியாகும்.

"தென் சென்னை இடைத் தேர்தல் அமைதியாகவும், ஒழுங்காகவும் இருந்தது; கணிசமான அளவுக்குச் சுறுசுறுப்பும் தென்பட்டது."

இது, நேற்று மாலை வந்த 'மெயில்' இதழின் கருத்து.

★ "வாக்கெடுப்பின் துவக்கத்தில், பெண்களே மிகுதியாக இருந்தார்கள்!

★ "முஸ்லிம் சமுதாயத்தினர் மிகுந்த திருவல்லிக்கேணி சூரப்ப முதலித் தெரு சாவடியில், முஸ்லிம் பெண்கள், சாரை சாரையாக வரிசையில் காத்திருந்து வாக்களித்தார்கள்!

★ "தீ விபத்துக்குள்ளான மயிலாப்பூர் முண்டக்கண்ணி அம்மன் கோயில் தெரு சாவடியில், பெண் வாக்காளர்களே பெருவாரியாகத் திரண்டு வந்தனர்."

இந்த மூன்றும், 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' தந்துள்ள செய்திகள்!

"பெண்கள், பீதியினல் வெளியே வந்து வாக்களிப்பதற்குப் பயந்து, வீட்டிலேயே தங்கிவிட்டனர்" என, டாக்டர் விஜயலட்சுமி அம்மையார் கூறுகிறார்!

ஒருவேளை இவர், வெளியே வந்து பாராமல் உள்ளேயே இருந்து தந்த அறிக்கையா இது?

அல்லது

மேற்கண்ட செய்திகளில் கூறப்பட்ட பெண்களெல்லாம், பெண்களாக இந்த அம்மையாருக்குத் தென்படவில்லையா என்பதனை, 'அறிக்கை' என்ற பெயரில் அவரது அரைகுறை கணிப்பினை வெளியிட்டிருக்கும் நாளேடு யோசனை செய்திருக்க வேண்டும்.

—எஸ். ஆர்.

இரஷ்யத் தலைநகரில் ஒரு மணி நேர இராணுவ அணிவகுப்பு

விதவிதமான ஆயுதங்கள் வண்டிகளில் பவனி

அக்டோபர் புரட்சிப் பொன் விழா கோலாகலக் காட்சி-- இந்திரா காந்தியும் கண்டுகளித்தார்

மாஸ்கோ, நவ. 7—

சோவியத் புரட்சிப் போன் விழாவையொட்டி நடந்த மாபெரும் போர்ப் படை அணிவகுப்பில் இரஷ்யா அதன் முழு இராணுவ பலத்தையும் உலகோர் காண வைத்தது.

தொலைவிசை ஏவுகணை ஆயுதங்கள் அணிவகுப்பில் இருந்தன; உலகத்தின் எந்த முனைக்கு வேண்டுமானலும் ஹைட்ரஜன் (நீர் வளி) குண்டைக் கொண்டுபோய் வெடிக்கும் ஏவுகணைகள் இவை!

அணிவகுத்து நிற்கும் போர் வீரர்களை நோக்கி வழக்கம்போல் 5 நிமிடச் சொற்பொழிவு நடந்தது.

மார்ஷல் குரோமிகோ, 'வியட்நாமில் போர் நடத்துவதன் மூலம் உலகப் போர் அபாயத்தை அமெரிக்கா அதிகமாக்கி வருகிறது' என்று குற்றஞ்சாட்டினர்; 'மனித குலத்தின் இயற்கையான வளர்ச்சிக்கு அமெரிக்கா தடங்கலாக இறக்கிறது' எனக் குறிப்பிட்டார்.

அணிவகுப்பில் சோவியத் புதிதாக கொணர்ந்த தாக்குதல் வகை ஏவுகணைகளையும், தற்காப்பு வகை ஏவுகணைகளையும் விண்வெளி அணு ஆயுதங்களையும் பிரமுகர்கள் வரிசையில் அமர்ந்திருந்த இந்தியத் தலைமை அமைச்சர் இந்திராவும், பின்லாந்து குடியரசுத் தலைவரும் கண்டனர்.

உருண்டோடி வரும் வண்டிகளில் புதுவகை தொலைதூர ஏவுகணை ஒன்று இருந்தது.

ஆயுத பவனி ஒருமணி நேரம் நீடித்தது. தரையிலிருந்து வானத்தை நோக்கி நெடுந்தூரம் பாயக்கூடியதும் தொலைவிலுள்ள இலக்கைத் தாக்கக்கூடியதுமான ஏவுகணைத் தொகுதி ஒன்று காணப்பட்டது.

"புதுவகை எரிபொருளைப் பயன்படுத்தும் புது ஏவுகணை ஆயுதமும் இருந்தது" என, 'டாஸ்' செய்தி கூறியது; இது, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை அளவில் இருந்தது; ஆனல், மூன்று நிலைகளில் பாய்ந்தடிக்கும் வகையல்ல.

புரட்சிக்காலத்து பழைய படை வீரர்கள் காட்சிமுதல், நாளது வரை சோவியத் கண்டுபிடித்துள்ள ஆயுதங்கள் அணிவகுப்பில் இடம்பெற்றன.

தலைப்பாகை அணிவதேன்?

விஞ்ஞானி இராமன் அளித்த பதில்!

அண்மையில் 80-வது வயதில் அடியெடுத்து வைத்துள்ள விஞ்ஞானி சர். சி. வி. இராமனை அவரது பிறந்த நாளன்று வாழ்த்துவதற்காகச் சென்றிருந்த பத்திரிகையாளர் ஒருவர், 'நீங்கள் எப்பொழுதும் ஏன் தலைப்பாகை அணிகிறீர்கள்?' என்று வினவினராம்.

"மண்டை (கனத்தினல்) பெருத்துவிடக் கூடாதே என்பதனல்தான்" என்று விடையிறுத்தாராம், அறிவியல் உலகத்தினல் ஒருமுகமாகப் பாராட்டப்படும் இந்தத் தமிழ் விஞ்ஞானி!

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

9--11--67

அருப்புக்கோட்டை

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு புளியை தியாகராய வாலிபர் சங்கம் எதிரில்; தலைவர்: சிவ. சண்முகசுந்தரனர்; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், கவிஞர் எம். எஸ். இராமசாமி, எஸ். எஸ். தென்னரசு, பி. பி. என். நல்லதம்பி, இர. சின்னச்சாமி பி.எஸ்சி.

10--11--67

கொளப்பலூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு தண்ணீர் தொட்டித் திடலில்; தலைவர்: கே. பி. பழனியப்பன்; பேசுவோர்: பி. ஏ. சாமிநாதன் எம்.பி., க. அன்பரசு, ஜி. பி. வெங்கிடு எம்.சி., பு. கா. பழனியப்பன்.

சிதம்பரம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு கீழவீதியில்; தலைவர்: ந. இராமலிங்கம; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், தில்லைவில்லாளன் எம்.ஏ.,பி.எல்., இரா. சாம்பசிவம், பொன். சொக்கலிங்கம், இரா. சக்கரவர்த்தி, புலவர் கூ. ஆறுமுகம், ஏ. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., வி. மாயவன் பி.ஏ., பி.டி.,பி.எல் ,எம்.பி., பரம. நடேசன், இராம. முத்துக்குமரன்.

திட்டக்குடி

அண்ணு மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: டி. ஆர். சுந்தரம்; பேசுவோர்: ஏ. பி. சனர்த்தனம் எம்.ஏ., எம். செல்வராசு, தொ. பிச்சமுத்து, பி. வேதமாணிக்கம், ம. பொன்னம்பலம், ச. இராமலிங்கம், வி. பி. பழனியாண்டி, அ. கிருட்டினன் எம்.எல்.ஏ., காரிமுனி. ஏ. திராவிடமணி, கே. இராயர்துரை.

காதால் கேட்டது!

ஒரு காங்கிரசுக்காரர்:—

"இந்தச் செய்தியைப் படிக்கிறேன், கேள்— 'தலைவர் காமராஜ் பெயர் விருதுநகர் வாக்காளர் பட்டியலில் உள்ளது; எனவே, இன்று தென் சென்னையில் தலைவர் வாக்களிக்கவில்லை."

மற்றொரு காங்கிரசுக்காரர்:

"ஆமாம்; இதில் என்ன விசேடம்?"

முன்னவர்:—

"பத்தில் பதினைந்தைக் கழிக்க முடியாது! வாக்காளர் பட்டியலில் இங்கே பெயரில்லை; எனவே ஓட்டுப்போடவில்லை!"

இரண்டாமவர்:—

"இதற்கு முன்பெல்லாம், பத்தில் பதினைந்து கழிக்கப்பட்டுக்கொண்டிருந்ததா? பெயர் அங்கே இருந்தாலும் இங்கே வாக்களிப்பு நடைபெற்றதா என்ன? என்னய்யா—இப்படியெல்லாம் செய்தி போட்டு ஆபத்தை உண்டாக்கிக்கொண்டு?"

டிச. 18ல் பலப்பரீட்சை!

மேற்கு வங்க சட்டமன்றத்தைக் கூட்ட முயற்சி

கல்கத்தா, நவ. 7—

மேற்கு வங்காளத்தின் ஆளும் கட்சியின் பலத்தைக் கண்டறிய, டிச. 18-ம் நாள் சட்டமன்றத்தைக் கூட்டுமாறு ஆளுநர் தர்ம வீராவுக்கு, முதலமைச்சர் அஜாய் குமார் முகர்ஜி கூறியிருப்பதாகத் தெரிகிறது.

"உணவுக் கொள்முதல் சம்பந்தமான வேலைகளில் அமைச்சர்கள் ஈடுபட்டிருப்பதால், டிச. 18-ம் நாளுக்குமுன் சட்டமன்றத்தைக் கூட்ட முடியாது" என்று முதலமைச்சர் கூறியதாகத் தெரிகிறது.

இப்போது நிலைமை உருவாகி வரும் விதத்தைப் பார்த்தால், 'மத்திய அரசு தலையிடக்கூடிய சாத்தியக்கூறு இல்லாமல் போய் விடவில்லை' என்று கூறப்படுகிறது.

"சட்டமன்றத்தை விரைவில் கூட்டாமல் தள்ளிப்போடுவதன் மூலம், இந்த அமைச்சரவை நீக்கப்படுவதற்கான வழியை ஏற்படுத்தியுள்ளது" என்று தெரிகிறது.

"அடுத்த 24 மணி நேரம், மிகவும் முக்கியமானதாயிருக்கும்" என்று அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

நூருண்டுக்குமுன் உருவாக்கப்பட்ட செயற்கை மொழி இந்தி!

ஐநூறு ஆண்டுகட்குப் பிறகும் அதனைப் பயன்படுத்த இயலாது

பெங்களூர், நவ. 8—

"உயர் கல்வி பயிற்று மொழியாக இந்தி எந்நாளும் உருவாக இயலாது; 500 ஆண்டுகளுக்குப் பிறகும் இது இயலக்கூடிய ஒன்றல்ல; சடங்குகளுக்கு ஏற்ப 'சம்பிரதாய' மொழியாக மட்டுமே இந்தியைப் பயன்படுத்த இயலும்!

"இந்தி ஓர் இணைப்பு மொழியாகுமென்றோ, உயர் கல்வி மொழியாகுமென்றோ அரசியல் சாசனத்தை உருவாக்கியவர்கள் எண்ணவில்லை.

"இன்று புழக்கத்திலுள்ள செயற்கை இந்தி மொழி, 1850-க்கு முன்புவரை, வழக்கில் இருந்ததில்லை, ஆகவே, அதில் நல்ல இலக்கியமோ, அறிவியல் நூல்களோ கிடையாது; பிறமொழி பேசுவோர்—இந்தி பேசுவோர்கூட அறிவு வளர்ச்சிக்காக அதனை நாடமாட்டார்கள்!

"நிதியமைச்சர் மொரார்ஜி தேசாயின் போக்கினல், பல கோடி ரூபாய், ஒரு பிற்போக்கான—செயற்கை மொழியை வளர்ப்பதற்குப் பாழாக்கப்படவிருக்கிறது. ஏற்கனவே பல கோடி ரூபாய்களை வாரியிறைத்த பிறகும், இந்தியில் உள்ள மொழி பெயர்ப்புகள், கல்விக் கூடங்களில் பயன்படுத்துவதற்கு அருகதையற்றவையாக உள்ளன! புதிய வார்த்தைகள் கண்டுபிடிக்கப்பட்டு—இந்தி பேசும் மக்களே புரிந்துகொள்ள இயலாமல் விழிப்பதுதான் கண்ட பலன்!

"இதுவரையில் இந்தியில் படித்துத் தேறியவர்களுக்குக்கூட, வானெலி கையாளும் புதிய செயற்கை இந்தியும், இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள அரசியல் சாசனங்களும்—சட்டங்களும், புரிந்துகொள்ள இயலாததாகவே இருக்கிறது!

"இந்தி வெறியர்களிடம் வலிவாக அரசு அகப்பட்டுக்கொண்டிருக்கிறது! அவர்களுடைய குறுகிய மனப்போக்கு நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைப்பதாகவும், மதச் சார்பின்மையை ஒடுக்குவதாகவுமே இருக்கிறது!

---பிராங்க் அந்தோணி

போட்டி வலுக்கிறது!

பத்திரிகையாளர் மாநாடு ஒன்றைக் கூட்ட அரபு நாடுகளின் ஆதரவை செஞ்சீன நாடியது; அடுத்த ஆண்டில், நடுக் கிழக்கில் இரஷ்யா கூட்டவிருக்கும் மாநாட்டிற்குப் போட்டியாக அதை நடத்தச் சீன திட்டமிடுகிறது!

எகிப்து—சோவியத்துத் திட்டத்தை ஆதரிக்கிறது; சீன— எகிப்தின் ஆதரவைப் பெறக் குலாவுகிறது. பீகிங்கிலிருந்து கெய்ரோ வந்த ஆசிய—ஆப்பிரிக்கப் பத்திரிகையாளர் குழு, எகிப்தின் ஆதரவைப் பெற முயன்றது!

அக்குழுவில், சீன—தாஞ்சானியா—ஜப்பான்—நாடு கடந்து வாழும் இந்தோனேசியர்—தென்னப்பிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இருந்தனர்; நடப்பு விவகாரங்கள், சீன—சோவியத்து மோதல் ஆகியன பற்றிய பீகிங்கின் கருத்துக்களையும் அக்குழுவினர் எடுத்துக் கூறினர்.

ஆசிய—ஆப்பிரிக்கப் பத்திரிகையாளர் சங்கம், 1963-ம் ஆண்டில் இந்தோனேசியாவில் தொடங்கப்பட்டது; மாஸ்கோவின் ஆதரவில் இயங்கும் பன்னாட்டுப் பத்திரிகையாளர் அமைப்பிற்குப் போட்டியாகச் சீனவில் அமைக்கப்பட்டது.

இந்தோனேசியாவில் கம்யூனிஸ்டுகள் தலைகவிழ்ந்துவிட்டதால், ஆசிய—ஆப்பிரிக்கப் பத்திரிகையாளர் சங்கம் பீகிங்கிலிருந்து கொண்டு, சீனக் கொள்கைகளைப் பிரதிபலித்து வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, [illegible]) [illegible] வெளியிடப்படுகிறது.